உ

சிவமயம்.

க்ஷீதாமிர்தசாரம்.

திருக்குடந்தை

கோமளவல்லியம்மாள்

இயற்றியது.

சென்னை - சூளை

ஸ்ரீ பாரதி அச்சிக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

உ

கடவுள் துணை.

ஸீதாமிர்தசாரம்.

ஜாவளி-இ-ம்-பியாக்-தாளம்-ரூபகம்-

கந்தநாதா யிந்தவேளை
கருணைசெய்ய வேணுமே கந்த

தொந்தமுடைய பந்தவிடைய
துன்பத்தழுந்தி வெம்பினேன்
சிந்தைதெளிவ தெந்தன்வகையின்
செம்பொற்பாத நம்பினேன். கந்த

பண்டுகருறா தொண்டர்தமது
பாவந்தீர்க்க வல்லையா
அண்டுமெளிமை கண்டுமெனையா
ளாததென்ன சொல்லையா. கந்த

சோதிப்பது சாதிப்படிக்கை
சோரவிடு தன்னீதியோ
எதித்தனையென் மீதிற்கொடுமை
யேழைநான் விரோதியா. கந்த

மதுரமாக மாம்பழஞ்சொன்
மகிழ்குஞ்சரி மனோகரா
பதுமமாதுகிதமுலாவும்
பழனிமலை கருபாகரா. கந்த

இ-ம்-மோகனம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்முகம் பார்த்தருளையா-நான்
ஏழையுனக்கடிமை யென்பதும்பொய்யா

அநுபல்லவி.

வன்மமென்னபழனி மலைமுருகோனே
வகையொன்றுந் தெரியாமல்வாடுகிறேனே. என்

சண்டாளனிவனென்று தள்ளாதேயென்னைத்
தண்டாயுதநீயன்றித் திக்குண்டோபின்னை. என்

தவரெத்தனைசெய்திருந் தாலுமிங்குடனே
யவைமுற்றுமனம்பொறுத் தாள்வதுன்கடனே. என்

வருத்துதேயடிக்கடி மாயாவிகாரந்
திருத்தியுள்வினைவலி தீர்த்திந்தநேரம். என்

ஒன்றுவிரண்டாசும்மா வோயாததுன்ப
மென்றுலினியெந்தநா ளெய்குவதுன்பம். என்

மாம்பழந்தமிழ்புனை வள்ளிசமேதா
பூம்பதந்தொழுநெறி புகலலாகாதா. என்

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வா வா வா பொன்
மயூரமீதியென் முன்-வா

அநுபல்லவி.

தேவாதிதேவா பழனித்
தெண்டாயுதபாணி யென்முன் வா வா

சரணங்கள்.

நன்னிலைகாணுதலைந்த நான்மிகவுமட்டி
யென்னினுநீயா லொண்ணுதா
வென்னவினியட்டி யென்முன் வா வா

பாதவர்ச்சனைசெய்யாத பாவியேனையும்
ஆதரிக்க வேணுந்தவ
ருதேயொருகாலு மென்முன் வா வா

எத்தனைசொன்னுலுநெஞ் சிரக்கம்பிரதா
கத்தகிவிஷயசிற்
சொரூபனந்த போசாவென்முன் வா வா

தஞ்சமுனையன்றியில்லாத தாமசமேனப்பா
அஞ்சலென்றிடலாகாதா
வந்தனைவெறுப்பாயென்முன் வா வா

வள்ளிதெய்வானைவிழி வண்டுநுகர்தேனே
தெள்ளியகவி மாம்பழக்
தியானிக்கும்பெம்மானே யென்முன் வா வா

இ-ம்-பீய்-அல்லது பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதரித்தென்னையினி யாண்டருள்தாயே
அசட்டைசெய்வது நீதியலநீயே.

அநுபல்லவி;

மாதவத்தவரும் பூதலத்தெவரும்
வழுத்தும்பழனி மலைவடிவேலா
சாதனைத்தொழிலேனே சோதனைக்கெதிர்நானே
சரிவள்ளிதெய்வ குஞ்சரிலோலா ஆதரி

கனவினுந்தாயி மனமெனும்பாவி
கலங்குவதுகொஞ்ச மேகனதொல்லை
வனசமும்பொருவாத வனதரஞ்சிதபாத
வணக்கத்துக்கிணக்கமாய் வருவதில்லை ஆதரி

தடியரைநாடி வடிதமிழ்பாடி
சஞ்சரித்தாலலுத் தளர்வொன்று
கடினமதுநின்சொந்தவடிமை கதியேனெந்தக்
காலமுமுனக்கடைக் கலமன்றோ ஆதரி

வாக்கினிலடுத்தும் பாக்கியங்கொடுத்து
மாம்பழக்கவிச் சிங்கமதிதோற்ற
காக்குமறுமுகவா நீக்குந்துக்கவா
கன்மவஜன்மசமுகிமக் கரையேற்றி ஆதரி

இ-ம்-மாஞ்சு-அல்லது-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வடிவே லரசேநான்
வருத்தஞ்சகிச்க மாட்டேனெனேரட்சி

அநுபல்லவி.

அடியேநானுன் னடைக்கலமித்ததி
அஞ்சவிடாதேயையா பழனிப்பதி வடிவே

சரணங்கள்.

அல்லும்பகலும் புண்
ணுகுதேபாவிநெஞ் சையோவென்செய்வேன்
சொல்லுந்தமிழேன் றுதிசெவிகேளாதோ
சும்மாகபடத்தொழிலிதுதானோதோ வடிவே

உனதுதயவு என்மே
லுண்டாயிருந்தா லொருதாழ்வுமில்லையே

ஜெனனசாகரத்திற் சுழன்றேபுத்தி
தேறுதயர்தேனே திவ்வியபராசத்தி வடிவே
என் றுந் துணை நீதா
னென் றுதுணிந்தே னெல்லாமுனைச்சார்ந்தே
சென்றிந்திரனிடர் தீர்த்தகுகாமுதிர்
செந்தமிழ்மாம்பழந் தியானித்திடுங்கதிர் வடிவே

இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதிசரவண பவகுகனே ஓம்
அரஅரசிவசிவ-ஆதி

அநுபல்லவி.

சோதிமலைமுடிவின் மீதினயனமிடுந்
தூயபரமசுக நேயமுனிவர்புகல் ஆதி

சரணங்கள்.

பந்துஜெனனமர ணந்தனில்விழும்
பாரமொழிந்துனது பதமலர்தாளுஞ்
சிந்தையுதவியருள் செய்யவயல்சூழுந்
திருமருவியசிவகிரிமிசைவாழும் ஆதி

மதமொருவினைபுரி விதமிகமீறும்
மயில்விலகிடவரு முயர்கதிதேறும்
அதிகமதியதுதங் தான்விடையேறும்
அரனதுசெவிதனி லொருபொருள்கூறும் ஆதி

வந்தனுதினந்தொழி மதுரப்பிரபந்த
மாம்பழந்தமிழின் மகிழவுமிகுந்த
சுந்தரஞான சொரூபகந்த
துங்கவன்வனசுப மங்களமாய். ஆதி

கீதாமிர்தசாரம் முற்றிற்று.